Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.CC.68/2017 PW-1**

Name : மங்கை
Father / Husband name : வேலாயுதம்
Village :
Age :
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 18.02.2025

**Accused 1 and 2 absent. Petition u/s 317 CrPC filed and allowed.**

**சாட்சி மனுவின்படி மீண்டும் அழைக்கப்பட்டு 1வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

எனக்கு எவ்வளவு நாட்களாக உடல்நிலை சரியில்லை என்றால் 20 வருடங்களாக எனக்கு உடல்நிலை சரியில்லை. இந்த வழக்கில் சம்மந்தப்பட்ட 67 சென்ட் எனக்கு பாகபிரிவினை மூலம் வந்தது என்றால் சரிதான். 06.11.1991 ல் செய்யப்பட்ட கிரைய ஒப்பந்தத்தில் எனது கணவர் வேலாயுதமும், மதன்லால் என்பவரும் கையொப்பம் செய்தார் என்றால் சரிதான். 06.11.1991 ம் தேதி நான் வேளாண்மைதுறையில் கண்காணிப்பாளராக அரசு பணியில் இருந்தேன் என்றால் சரிதான். நான் அரசுப்பணியில் இருந்ததால் எனது கணவர் தான் இந்த சொத்தினை கிரைய பேசியது, ஒப்பந்த பத்திரத்தை தயார் செய்தது ஆகியவற்றை முன்னின்று செய்தார் என்றால் சரிதான். எனது கணவர் தான் ரூ.50,000/- ஐ வாங்கினார் என்றால் சரிதான். வாங்கி அவரே வைத்துக்கொண்டார் என்றால் சரிதான். எனது கணவர் அட்வான்ஸ் பணத்தை வாங்கிக்கொண்டு ஒப்பந்த பத்திரத்தை எங்கள் வீட்டில் கொண்டு கொடுத்தபோது தான் கையொப்பம் செய்தேன் என்றால் கையொப்பம் செய்தேன், வீட்டில் செய்தேனா என்று ஞாபகமில்லை. அதன்பிறகு தான் நான் ரிஜிஸ்ட்டர் ஆபிசிக்கு சென்று பவர் கொடுத்தேன் என்றால் பவர் கொடுத்ததும், அக்ரிமன்ட் கொடுத்ததும் ஒரே நாள் தான். எனது ஒப்பந்த பத்திரம் பதிவு செய்யப்படவில்லை என்றால் தெரியவில்லை. அதன்பின்னர் பவர் ரிஜிஸ்டர் ஆபிசிக்கு சென்று பவர் பதிவு செய்யப்பட்டதா என்றால் ஒப்பந்தம், பவர் ரிஜிஸ்டர் செய்தது கோர்டில் தான் நடந்தது. 06.11.1911 ம் தேதி நான் ஒப்பந்த பத்திரம், பவர் செய்தேன், 14.11.1991 ல் எதிரி

அவரது அவரின் மனைவியின் பெயருக்கு பதிவு செய்தார் என்றால் சரிதான். அதனை தெரிந்து 3 மாதத்திற்கு பிறகு நான் பவரை ரத்து செய்தேன் என்றால் சரிதான். எனது கணவர் 1997 ம் வருடத்தில் தான் இறந்துவிட்டார் என்றால் சரிதான். நான் அரசு ஊழியராக இருக்கும்போது அந்த நிலைத்தை விற்பதற்கு அரசிடம் அனுமதி வாங்கினேனா என்றால் வாங்கினேன். நான் அந்த அனுமதி பெற்றதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்தேனா என்றால் தாக்கல் செய்தேன். நான் அனுமதி பெற்று தான் அந்த நிலத்தை விற்றேன் என்று போலிசார் விசாரணையில் சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான். நான் அரசாங்கத்தில் அவ்வாறு அனுமதி பெறவில்லை, பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. 1991 ம் வருடமே தேவராஜ் என்பவர் என்னை ஏமாற்றியதற்கு நான் முதன்முதலில் அறிவிப்பு கொடுத்தது 2002 ம் ஆண்டு தான் என்றால் சரிதான், 2, 3 தடவை அறிவிப்பு கொடுத்தேன். ஏறக்குறைய 2014 ல் தான் போலிசாரிடம் புகார் கொடுத்தேன் என்றால் முன்னதாகவே கொடுத்தேன்.

**சாட்சி அவருக்கு உடல்நிலை சரியில்லாமல் நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளார். அவர் சாட்சியம் அளிப்பதற்கு தனக்கு முடியவில்லை என்று கூறுவதால் அவரது குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

/ திறந்த நீதி மன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அதை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என் முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண். 1 , திண்டிவனம்.